# மாம்பலத்தில் ஹிந்திக் கண்டனக்கூட்டம்.

## தமிழர்கள் ஆத்திரம்.

## பார்ப்பனர் குறும்பு.

### தமிழபிமானிகள் விரமுழக்கம்.

சென்னை, அக். 11.

நேற்று சாயங்காலம் தியாகராய நகர முன்னேற்றக் கழக ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கனம் ராஜகோபாலாச்சாரியார், மதமான பேச்சைக் கண்டனம் செய்யவும் கனம் சுப்பராயன் ராமநாதன் கோஷ்டியின் அடிமையின் அகங்காரங்களை எடுத்துக் கூறவும், ஹிந்தியை கட்டாயப் பாடமாக புகுத்துவதை எதிர்க்கவும், கூட்டப்பட்டது.

ஊர்வலம்.

கூட்டப்பட்ட நேரத்துக்கு முன்பாக ஒரு பர்லாங் நீளமுள்ள ஒரு பவனி சென்றது. பவனி உஸ்மான் ரோட்டிலிருந்து புறப்பட்டு தியாகராய நகரின் பிரதம வீதிகளின் வழியாக சென்றது பவனியில் தமிழை ஆதரிக்க கொடிகள் கொண்டுபோகப்பட்டன. "ஹிந்தி வேண்டாம்," "ஹிந்தி வேண்டாம்" என்று ஓரே கூச்சலாக இருந்தது.

சில பார்ப்பனர் வீட்டின் முன் பவனி செல்லும் போது, "ஏன் கூச்சல்" "நடக்கிறது நடந்தேதீரும்" "இந்திகட்டாயம் தான் வருமே, ஏன் கூச்சல்" என்னும் சொற்கள் காதில் விழுந்தன.

பவனி வெகு விமரிசையாக சென்று, ஏற்கனவே கூட்டம் கூடியிருந்த பானகல் தோட்ட வெளிவீதியில் நின்றது. நின்றதும் பாடல்கள் பாடி கூட்டம் துவங்கிற்று. சென்னை கிறிஸ்தவ கல்லூரி பிரதம தமிழ் பண்டிதர் தோழர் சற்குணர் அக்கிராசனம் வகித்தார்.

தலைவர் பேச்சு.

தலைமை பிரசங்கத்தில் தோழர் சற்குணர் கூட்டத்தில் பிரசங்கம் செய்கிறவர்களை ஹிந்தியைப்பற்றியும் தமிழைப்பற்றியும் மட்டுமே பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தான் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவன் அல்லவென்றும் கிளர்ச்சியானது எல்லா தமிழ் மக்களையும் பொறுத்தது என்றும் சொன்னார். தான் ஒரு கிறிஸ்தவன் ஆனாலும் ஞாயிற்றுக் கிழமையிலே கூட்டத்துக்கு வந்த காரணமானது தனக்கு தமிழ் மேலுள்ள அன்பே என்றும் சொன்னார்.

தேவநேசப் பாவலர்.

திருச்சி தேவநேச பாவலர் முதல் முதலில் பேசினார். அவர் இரண்டு கேள்வி கேட்டார். ஆரியாலே தமிழ் வந்ததா? வடமொழிகள் தமிழுக்கு அவசியமா? என்பனவே அந்தக் கேள்விகள். இவ்விரு கேள்விகளுக்கும் அவர் 'இல்லை" என்று பதிலளித்தார். ஆராய்ச்சியானது தமிழ்தெற்கே உற்பத்தியாகி வடக்கேசென்றது என்பதற்கே அத்தாட்சி இருக்கிறதே அல்லாமல், அடுத்த பாதைக்கு சற்றேனும் அத்தாட்சி இல்லை என்றார். தமிழ் மொழி பல பதக்கள் உள்ளது அதற்கு யாதொரு துணையும் வேண்டுவதில்லைஎன்று பல முகாந்தரங்களை எடுத்துக் கூறினார். முடிவில் தான் காங்கரஸை சேர்ந்தவன் என்றும், காங்கரசுக்கும் ஹிந்திக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னார்.

அருள்தங்கையா.

கிறிஸ்தவ அபிவிர்த்தி சங்க மானேஜரான தோழர் அருள் தங்கையா பாதிரியவர்கள் அடுத்தாற்போல் பேசினார். அவர் தமக்கு சமய சமூக சேவையை தவிர அரசியல் விஷயங்களில் யாதொரு பங்கும் பந்தமும் இல்லை என்ற முகவுரை யோடே தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

அவர் பிரதம மந்திரியானவர் ஹிந்தி எதிர்ப்பானது ஏதோ சில அரசியல் வாதிகள் மூலமாகத்தான் செய்து வரப்படுகிறதென்று சொல்வது தப்பென்று நிரூபிக்கவே தான் விஜயம் செய்ததாக சொன்னார். தஞ்சாவூரில் நடந்த மாகாண உபாத்தியாயர் சங்கத்தில் ஹிந்தி மொழியை பள்ளிக்கூடத்தில் புகுத்த ஆதரவு கொடுத்ததாக வெளிவந்திருக்கிறது. ஆனால் தன் அனுபவத்தில் கண்டது அம்மாகாணக் கூட்டங்களில் 500க்கு 495 பேர் பார்ப்பனராக இருக்கிறார்கள். அப்படி இருந்த போதிலும் அந்த தீர்மானமானது ஏகமனதாய் நிறைவேற்றப்படவில்லை என்று கேள்விப்பட்டதாகவும் சொன்னார். மேலும் ராஜகோபாலாச்சாரியார் விஜயம் செய்திருந்ததினால் அவர் முகஸ்துதிக்கு அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும்சொன்னார். அப்படி தீர்மானம் ஏற்பட்டிருந்தாலும் அத்தீர்மானத்தை தமிழ் மக்கள் ஆதரிக்க முடியாது என்று ஆணித்தரமாகப் பதில் கொடுத்தார். ஏனெனில் அந்த தீர்மானம் மாணவரையும் பொறுத்ததல்ல, பெற்றோரையும் பொறுத்ததல்ல, உபாத்தியாயரையும் பொறுத்ததுமில்லை அது தேசத்தையும் தேச மக்களையும் பொறுத்தது. ஆகவே ராஜகோபாலாச்சாரியானவர் கட்டாயமாக ஹிந்தியை வைத்தே தீருவேன் என்று சொல்வது அவ்வளவு யோக்கியதையான பேச்சல்ல என்று சொன்னார்.

மேலும் சர்க்கார்அறிக்கையில் இப்போது முதல் மூன்று பாரம் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் காலம் ஆக ஆக மேல் பாரத்திலும் புகுக்கப்படும் என்பது நிச்சயம். ஆகவே எதிர்ப்புக் கட்டாயம் அவசியம் என்று பேசினார்.

சி. என். அண்ணாதுரை.

அதன்பின் தோழர் சி. என். அண்ணாதுரைபேசினார். அவர் முகவுரையை ஒரு கதையோடே ஆரம்பித்தார். ஒரு காலத்தில் ஒரு மன்னன் இருந்தான். அவருக்கு அநேக காலம் புத்திர பாக்கியம் இல்லை. ஜோதிடர்கள் அவருக்கு ஒரு புத்திரன் உதயமாகும் என்றும் ஆனாலும் ஒன்பதாவது வருடத்தில் தான் பேச்சு வரும் என்றும் சொன்னார்கள். அப்படியே நடந்தது. இராஜ குமாரனுக்கு ஒன்பதாவது வயது தின நாளில் தர்பார் கூடிற்று. யாவரும் பேச்சைக் கேட்க ஆசையாயிருந்தார்கள். பிள்ளையாண்டான் முதலில் "அம்மா" என்றான். வெகு சந்தோஷம். அக் கூட்டத்தில் ராஜாவின் சகோதரி இருந்தார்கள். அவர்களோ விதவை. ராஜ குமாரன் தன் தாயைப் பார்த்து அம்மா உங்களுக்கு எப்போது அத்தை கழுத்துப் போலாகும் என்று கேட்டானாம். எல்லாருடைய முகமும் வெட்கிப் போயிற்று. ராணியோ ராஜாவைப் பார்த்து பிள்ளைக்கு பிரஜைகளுக்கு நன்மை செய்ய இப்போதே ஆசையாகி விட்டது என்று பதில் சொன்னாளாம்.

அதுபோலவே சுயராஜ்யமாகிய குழந்தை என்று பிறக்கும் என்று எதிர்பார்த்திருந்து, வோட்டுக்களை ஏமாந்து மஞ்சள் பெட்டியில் நிரப்பிய தமிழ் வாக்காளர்களின் எண்ணத்தில் தானே சர்வாதிகாரி என்று, ஓட்டுகளைப் பெற்றபின்னர் சொல்லுகிற தோழர் கனம் ராஜகோபாலாச்சாரியார் மண்ணைப் போட்டு தமிழன்னையையும் தமது ஏகாதிபத்தியச் செயலினால் கொலைசெய்ய முன்வந்து விட்டார் என்றுகூறிஹிந்தியைக் கட்டாயப்பாடமாக்ககூடாதென்பதற்குப்பல காரணங்கள் கூறினார். கடைசியில் இந்த ஹிந்தியைக்கட்டாயபாடமாக ஆக்காமல் இருப்பதற்கு எது வழி? அதை எவர் சொல்லினும் அதைச் செய்த தயாராக இருப்பதாகச் சொன்னார் தாம் காங்கரசில் சேர்ந்தால் அப்படி ஆகாமல் இருக்குமானால் உடனே அம்மேடையிலே ஆகுவதாக வாக்குக் கொடுத்தார். கனம் ராஜகோலாச்சாரி மூன்று புஸ்தகம் எழுதினதினாலே தமிழுக்கு யாதொரு பங்கம் வாரது என்று சொல்லுகிறார். ஆனால் மறைமலையடிகள் 37 புஸ்தகங்களை எழுதினவர் பங்கம் ஏற்படும் எனகிறார். ஆகவே விஷயத்தை வாதித்துப்பார்த்தால், கனம் ராஜகோபாலாச்சாரி வாதம் பிடிவாதம் என்றே சொல்ல வேண்டும். தங்கள் உயிருள்ள வரைக்கும் தமிழுக்கு பங்கம் வராமல் பார்த்துக் கொள்வோம் என்று கனம் மந்திரிமார்கள் சொல்வார்களானால், தமிழ் மக்கள் அதற்குக் கொடுக்கக்கூடிய பதில் எங்கள் உயிர் ரத்தம் இருக்கும்வரை அந்த தமிழுக்கு யாதொரு கனவீனம் உண்டாகாமல் பார்த்துக்கொள்வோம் என்பதே.

கே. எம். பாலசுப்பிரமணியம்.

அடுத்தபடியாக பேசிய கே. எம். பாலசுப்பிரமணியம் கூறியதாவது. ஹிந்தியைபள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கினால் அதை எவ்வித துன்பத்திற்கும் அஞ்சாது தனித் தமிழ் இரத்தமுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கடைசிச் சொட்டு இரத்தம் உடலிலுள்ளவரை எதிர்த்தே தீரவேண்டும். கனம் ராஜகோபாலாச்சாரியார் அகில இந்திய காங்கரஸ் கமிட்டி மெம்பர்களிடத்தில்தான் ஹிந்தியைக் கட்டாயபாடமாக்குவதாக ரகசியமாக வாக்களித்துவிட்டபடியால் அம்மொழியைத் தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று சொல்வது யோக்கியமல்ல. அவருக்கு அவ்வாறு வாக்குறுதி செய்ய எவ்வித சுதந்தரமும் கிடையாது. அவர் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கவேண்டுமென்றால் இன்றே காங்கரஸ் மெம்பர்கள் தாங்கள் சட்டசபையில் உட்காரும் சுதந்தரத்தை ராஜிநாமாசெய்துவிட்டு ஹிந்தியை கட்டாயபாடமாக்கப்போகிறோம்என்று வாக்காளர்களிடத்தில் சொல்லி மற்றொரு தேர்தலில்வெற்றிபெற்று வரவேண்டும். அப்படியல்லாது சர்வாதிகாரி தான் என்று நினைத்து ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கி அது ஐ. ஸி. எஸ். மெம்பர்களின் சம்பளம் குறைக்கப்பட வேண்டுமென்று தேர்தலுக்கு முன் கூறி இப்பொழுது அவர்களுக்குப் பெரிய சம்பளம் கொடுக்கத்தான்வேண்டுமென்று சொல்லி மக்களை ஏமாற்றுவது போலவும் சுயராஜ்யம் தருகிறேன் என்று சொல்லி தற்போதுள்ள உரிமைகளையும் அபகரித்துக் கொள்வது போலவும் ஆகும்.

தோழர்கள் டாக்டர் சுப்பாரயன் ராமநாதன் கம்பெனிக்கு மந்திரிப் பதவி கொடுத்தது ராஜகோபாலாச்சாரியானதால் அவர்கள் தங்கள் தலைவர் சொல்லிபடி கேட்டுத்தான் தீர வேண்டும். இல்லையேல் மந்திரி பதவி போய் விடும். பார்த்தனுக்குகண்ணன் சாரதி உத்தியோகம் செய்த பாரத கதை போல் உடல் பூரிப்புள்ள ராமநாதன் ராஜகோபாலாச்சாரியாருக்கு மட்டுமல்ல, மற்றும் எத்தனை பேருக்கானாலும் வண்டி ஒட்டட்டும். அவர் வண்டியின் முன்னிருந்தால் அவர் உடற்பாரம் அநேகர் பாரத்தை வண்டியைத் தூக்காமல் சரிப்படுத்திக் கொள்ளும். இதில் நமக்கு வருத்தமில்லை. ஹிந்தியைக் கட்டாய மாக்குவதையே நாம் எதிர்ப்பது

சுப்பராயன் பிதற்றல்.

சுப்பராயன் ஹிந்திபடித்தால் தான் போர்க்குணம் வருமென்று சொல்லுகிறார். ஆனால் அவர் ஏன் தன் குழந்தைகளுக்கு ஹிந்தியை கற்றுக் கொடாமல் இங்கிலாந்திற்கு அனுப்பவேண்டும்? காரணமென்ன? ஜவகர்லால் ஏன் தன் மகளை ஆக்ஸ்போர்டுக்கு படிப்பதற்கு அனுப்பவேண்டும்? மற்றவர்கள் குழந்தைகளுக்கு மாத்திரம் ஏன் துன்பத்தைக் கொடுக்க வேண்டும்? சுப்பராயன் நாகபட்டினத்தில் நாங்கள் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைத்தே தீருவோம். உங்கட்கு சம்மதமில்லையானால் அடுத்த தேர்தலில் எங்களைத் தோற்கடித்து விடுங்கள் என்று சொன்னாராம். அம்மாதிரியான பேச்சு அயோக்கியத்தன்மும் பொறுப் பின்மையும் உடையதாகும். நியாயப்படி யோசித்தால் இவரும் இவர் சகாக்களும் மேல் நாட்டு பார்லிமெண்டரி முறைப்படி தங்கள் பதவிகளை இன்றே ராஜிநாமா செய்துவிட்டு புதுத் தேர்தலில் ஹிந்திநுழைப்பைப் பற்றிப் பேசி வெற்றிபெற்றுத்தங்கள் அமுலை நடத்தவேண்டும்.

முட்டாள் பேச்சு.

சாணாகதி மந்திரிகளில் சிலர் தமிழ் மொழியானது ஆங்கிலத்தை எதிர்த்து வென்றுவிட்டது ஆதலால் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவதால் தமிழுக்குக் கேடுவரும் என்று எண்ணுவது தப்பென்று கூறுகிறார்களாம். இது அவர்களின் முட்டாள் தனமான பேச்சாகும். இது ஒரு சிறு கதையால் உங்களுக்கு காட்டுகிறேன். ஒருவனுடைய குழந்தை கடலில் தவறி விழுந்த பொழுது அவன் அக்குழந்தையை உடனே எடுத்தானாம் அது உயிர் துறக்கவில்லையாம். மற்றொரு நாள் அக்குழந்தையை சென்னையிலுள்ள கூகத்தில் ஓடும் சாக்கடை தண்ணீரில் அமிழ்த்திப் பிடித்துக் கொண்டிருந்தானாம். பக்கத்திற் சென்று கொண்டிருந்த ஒருவன் அவ்வாறு குழந்தையை ஏன் துன்பப்படுத்துகிறான் என்று கேட்டதற்கு இந்தக் குழந்தை மிகுந்த நீருள்ள கடலில் விழுந்தபோதே இறக்கவில்லை. குறைந்த நீருள்ள இவ்விடத்தில் அமிழ்த்துவதனால் இறக்காது என்று கூறினானாம். சாணாகதி மந்திரிகள் ஹிந்தியால் தமிழ் கெடாது என்று சொல்வது மேற்சொல்லியவன் கூறிய முட்டாள்தனமான சமாதானத்தையே ஒக்கும்.

பகற்கனவு.

மற்றும் ஹிந்தி படித்தால் வீரம் உண்டாகுமென்று சாணாகதி மந்திரிகள் கூறுகின்றார்கள். ஹிந்தியால் தமிழ் நாட்டிற்கு வீரம் உண்டாகப்போவதில்லை. அது ஒரு பகற்கனவு. சங்க நூலாகிய புறநானூற்றில் பழந் தமிழ்ப் பெண்களின் வீரத்தைப் பாக்கக் காணலாம். ஒருத்தி தன் மகன் போரில் புறங்காட்டி யோடினான் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு என்மகன் பேரில் புறங்காட்டி ஓடியிருந்தால் பேடித்தனமுடைய அவனுக்குப் பால்கொடுத்த என் முலைகளை அறுத்தெறிவேன் என்றுசொல்லிஉண்மையறிவதற்காகப் போர்க்களம் சென்றனளாம். அங்கே தன் மகன் பகைவரிலொருவனைக் குத்தித்தானும் முதுகு காட்டி ஓடாமல் மார்பில் குத்துவாங்கி குற்றுயிராக் கிடந்ததைப்பார்த்த தாய் "ஈன்ற பொழுதிற்பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெக் கேட்டதாய்" என்றபடி தன் மகன் வீரச் செயலைப்பார்த்து, மகன் இறக்குந் தருணத்தில் துன்பப் படாது பெற்ற காலத்திலடைந்ததைவிட மிகுந்த மகிழ்ச்சியடைந்தாளாம்- இக்காலத்துத் தமிழ்ப் பெண்களின் வீரச் செயல் களையும் எடுத்துப்பார்ப்போம். சமீபகாலத்தில் முதன் முதல் இந்தியா தேசத்தில் தேச நன்மைக்காக, சிறைக்குச் சென்ற பெண்கள் யார்? ஹிந்தி மொழியைப் பேசும் பெண்களுமல்ல; வடநாட்டுபெண்களுமல்ல; கொழுத்த தமிழ்ப் பெண்களாகிய ஈ. வெ. ராமசாமி நாயக்கரது மனைவியும் தங்கையுமேயாவர்.

"தினமணி" திமிர்.

சில நாட்களுக்கு முன்புபாரதியார்ஒருமனுவெழுதிகவர்னரைப் பார்க்க வேண்டுமென்று சொன்னதற்கு தினப்புழுகுமணியாகிய 'தினமணி'யாசிரியர்"கவர்னருக்குமா காவடி" என்ற தலைப்பு கமிட்டுச் சில செய்திகள் எழுதியுள்ளார். நாங்கள் காவடி எடுப்பது உண்மை தான். பானகல் அரசர் மருத்துவ இலாகாவில் வெள்ளையர்களுக்குஅதிகஇடம் கொடுக்க முடியாது என்றதற்கு கவர்னர் முரண்டார். இதோ ராஜிநாமா என்றார்பானகல் அரசர். கவர்னர் உடனே வழிக்கு வந்தார். சாணாகதி முதன் மந்திரி நாங்காஸ் கொடியைத் தேசியக்கொடிஎன்றார். கவர்னர் அது பொருத்தமில்லைஎன்றார். கவர்னரின் காலடியில் விழுந்தார் சரணாகதி முதன் மந்திரி ஆச்சாரியார். காவடி எடுப்பது பெருமையா? காலடியில்விழுவது பெருமையா? நாங்கள் காவடி எடுத்தாலும் காலடியில் விழமாட்டோம். இதுவே தமிழ் வீரம்.

மகமது இப்ராஹிம் சாயபு.

பின் பேசிய மகம்மது இப்ராகிம் சாயபு எனக்கும் தேசீயம் உண்டு. ஜல்லியன் வாலாப் படுகொலை நடந்த சமயம் முதலில் சிறைக்குச்சென்றவர்களில் நானும் ஒருவன். எனக்கு ஆங்கிலம் தெரியாது. ஹிந்தியும் தெரியாது. ஆனால் வட இந்தியா, சீனா, ஜப்பான், மலேயா ஜாவா முதலிய நாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி சென்று வந்திருக்கிறேன் ஆதலால் குழந்தைகளை ஹிந்தி படிக்கச்சொல்வது மிகவும் பெரிய பாவச்செயலேயாகும். நான் பலமுறை சிறைக்குச் சென்றிருக்கிறேன். தமிழருக்காக இன்னும் சிறை சொல்ல பின் வாங்க மாட்டேன்.

1935 வது வருட ஹிந்தி சீர்திருத்தச் சட்டத்திலே கவர்னருக்கு மனுச் செய்ய வழியிருக்கிறது" கவர்னருக்குமா காவடி" என்பது மேற்படி சட்டத்தை உடைப்போமென்று சொல்லி பின்பு கவர்னரிடத்தில் சாணாகதியடைந்து அச்சட்டத்தையே தலைமேற் சுமந்து திரியும் வகுப்பாரின் அறிவீனமும் அயோக்கியத் தனமுமாகும் என்று பேசினார்.

தலைவர் முடிவுரை.

பின்பு தலைவர் முடிவுரை கூறியதாவது ஹிந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்குவதனால் ஹிந்தியை எல்லோரும் படிக்க முடியாது. அப்படி ஹிந்தியை எல்லோரும் பயில வேண்டுமானால் இரண்டு வழிகள் உண்டு. அவையாவன:—

1. தமிழ் நாட்டுக் குழந்தைகள் எல்லாவற்றையும் தாய்மாரை விட்டு பிறந்தவுடன் பிரித்து அக்குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஹிந்தி படித்த செவிலியை நியமனம் செய்வது.

2. ஹிந்திப் பெண்களை தமிழ் ஆடவர்களுக்கு மணம்செய்விப்பது.

(3) இந்த இரண்டு வழிகளுமே கையாளுதற்குத் தக்கவை.

வீரம் வேண்டுமானால் பண்டை ஸ்பார்ட்டா (Sparta) தேசத்தில் எவனுடன் சேர்ந்தாவது பெண்கள் வீரரைப் பெறுதல் என்ற முறையைத்தான் பின்பற்றவேண்டும். ஹிந்தியினால் வீரம் உண்டாகாது. ஆனால் பல ஆடவரைச் சேர்தல் தமிழ் நாட்டு வழக்கமுமன்று; நமக்கு வேண்டியது மன்று.

தமிழ்க்கோலை.

காங்கரஸ் கூட்டத்தார் வெள்ளையர்களை ஓட்டிவிடுவோமென்று சொல்லிப் பதவி வந்தவுடன் அவர்களுடன் நட்புப் பூண்டு The nearer the blood-ier என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஏற்க நம் தமிழ்மொழியை கொலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

மேலும் ராஜகோபாலாச்சாரியார் தான் படித்தகாலத்து ரஸாயனம் (Physics) சிறப்பாகப் படித்தாராம். சரித்திரம்படிக்கவில்லையாம். அப்படியானால் இவர் முதன் மந்திரி பதவிக்கே தகுதியுடையவரல்ல நானே மந்திரிக்கு மந்திரி பதவி வகிக்க தயாராயிருக்கிறேன்.

முதன் மந்திரி தமிழர் அறிவிலிகள் என்று சொல்வது அவ அனுபோகத்திற் கண்டது போலும். தன்னைத் தலைவனாகக் கொண்டு காலடியில் கிடக்கும் தமிழர்களையே மனதில் வைத்துப் பேசுகிறார் போலும்.

முதன் மந்திரி தான் எப்பொழுதும் மந்திரி பதவியாகிய குதிரையில் சவாரி செய்யலாம் என்று எண்ணியிருக்கிறார். அது முட்டாள்தனம். அவர் எப்பொழுதும் அந்தக் குதிரை மேற்செல்ல முடியாது. கூடிய சீக்கிரத்தில் குதிரை அவரைக் கீழே தள்ளப் போகிறது என்பதாகப் பேசினார். மிகுந்த கோஷத்துடன் கூட்டம் கலைந்தது

## ஹிந்திக் கண்டனக் கூட்டம்.

(ஒரு நிருபர்)

சென்னை, அக் 11.

சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் 14-10-37ந் தேதி வியாழனன்று ஹிந்திக் கண்டனக் கூட்டம் சென்னையில் நடைபெறும்.

## எழும்பூர் போலீஸ் கோர்ட்.

### திருவல்லிக்கேணி பீச் கொலை வழக்கு.

### எல்லா எதிரிகளும் விடுதலை.

சென்னை, அக். 11.

சென்ற மே மாதம் 23ந்தேதி திருவல்லிக்கேணி பீச்சில்அப்துல் குத்தூஸ், சையத் மொஹிதீன், அப்துல் சுப்பான், பாதக்பாஜி ஆகியவர்கள் கையில் தடிகளுடனும் பிச்சுவாக்களுடனும் ஒரு ஹிந்துவை கொலைசெய்ததாகவும் நாசில்அலி என்பவனுக்கு படுகாயமுண்டு பண்ணியதாகவும் இ. பி. கொ. 147, 148, 149, 302, 224, பிரிவின்படி வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

மாஜிஸ்திரேட் ஷை எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று விடுதலை செய்து விட்டார்.